# வெள்ளி நூல்

'வெள்ளி நூல்' என்னும் இலக்கிய நிகழ்வு வாரந்தோறும் ஓர் இலக்கிய நூலை அறிமுகம் செய்யும் நோக்கில் இளங்கலைத் தமிழ் (B.A. Tamil) மூன்றாமாண்டு (2018 - 2021) பயிலும் மாணவர்களால் ஒருங்கிணைக்கப்படுகிறது. அதன் முதல் நிகழ்வு 19/03/2021 அன்று தொடங்கியது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் த. பிரகலாதன் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவினைக் கல்லூரி முதல்வர் முனைவர் K சத்யநாராயணா தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். அதன் தொடர்ச்சியாக தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு- ச. கார்த்திக் 'தற்காலப் புதினங்களின் போக்குகள்' என்னும் தலைப்பில் உரையாற்றினார். அதில் பாட்டாளி எழுதிய கீழைத்தீ, எஸ். ராமகிருஷ்ணனின் இடக்கை, மாற்கு எழுதிய சுவர்கள், ஜெயமோகன் எழுதிய வெள்ளையானை ஆகிய நான்கு நூல்களை அறிமுகப்படுத்தி தற்காலப் புதினங்களின் போக்கை எடுத்துரைத்தார்.

வெள்ளி நூலின் இரண்டாவது நிகழ்வில்(29/03/2021) தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் அ. ஜெயபால், அலெக்ஸ் ஹேலி எழுதிய Roots என்னும் நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு நூலான 'ஏழு தலைமுறைகள்' என்னும் நூலினை அறிமுகப்படுத்தி சிறப்புரை ஆற்றினார்.

வெள்ளி நூலின் மூன்றாவது நிகழ்வில் (31/03/2021) தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் வெ. டில்லிபாபு, வைரமுத்து எழுதிய 'மூன்றாம் உலகப்போர்' என்னும் நாவலை அறிமுகப்படுத்தி சிறப்புரை ஆற்றினார். 2020 2021 ஆம் கல்வியாண்டின் இறுதியில் தொடங்கப்பெற்ற 'வெள்ளி நூல்' இலக்கிய நிகழ்வு மூன்று உரைகளுடன் சிறப்புற நடைபெற்றது.




வெள்ளி நூல் இலக்கிய நிகழ்வினை கல்லூரி முதல்வர் முனைவர் K.சத்யநாராயணா தொடங்கி வைத்து உரையாற்றினார்




முதல் நிகழ்வில் தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. ச. கார்த்திக் 'தற்காலப் புதினங்களின் போக்குகள் என்னும் தலைப்பில் உரையாற்றினார்




இரண்டாம் நிகழ்வில் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் அ. ஜெயபால் ‘எழு தலைமுறை என்னும் நூலினை அறிமுகப்படுத்தி உரையாற்றினார்.




மூன்றாம் நிகழ்வில் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் வெ. டில்லிபாபு 'மூன்றாம் உலகப்போர்' என்னும் நூலினை அறிமுகப்படுத்தி உரையாற்றினார்.




வெள்ளி நூல் இலக்கிய நிகழ்வில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் த. பிரகலாதன் தன் கருத்துக்களைத் பகிர்ந்து கொண்டார்.



வெள்ளி நூல் நிகழ்வில் பங்குபெற்ற மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள்